# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

Telephone No : 044-28548529
Fax No : 044-28516574

E-mail: coteecitu@gmail.com
Web: www. cotee.org

CITU

சுற்றறிக்கை எண் 23/2015 நாள் : 09/11/2015

பெறுநர்

**மாநில நிர்வாகிகள்**
**கிளைச் செயலாளர்கள்**
**செயற்குழு உறுப்பினர்கள்**

அன்புள்ள தோழரே,

வணக்கம்,

## வெள்ள நிவாரணப்பணியில் மத்திய அமைப்பு

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக வரலாறு காணாத அடைமழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. கட்டுக்கடங்காத வெள்ளத்தால் ஏரிகள், கால்வாய்களில் உடைப்பு ஏற்பட்டதோடு நீரினால் நிரம்பிய ஏரிகளின் தண்ணீரை திறந்து விட்டதனால் ஏற்பட்ட பெருவெள்ளம் சாலைகள், குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்து பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

300-க்கும் மேற்பட்டோர் உயிர்இழந்துள்ளனர். ஒரு தனியார் மருத்துவனையில் மட்டும் 18 நோயாளிகள் இறந்துள்ளனர். வெள்ளத்தால் இறந்த முதியோர்கள் இங்கே அவர்களின் உறவினர்களோ வெளிநாட்டில், ஆதரவற்ற சடலங்கள் மருத்துவமனையில், இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய முடியாமல் சொந்தங்கள் பரிதவிக்கும் நிலை.இவ்வாறு விவரிக்க முடியாத பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளது. தேங்கிய நீர் வடிந்து வீட்டின் கதவுகளை திறந்தால் சாவு எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும். பெரும் மழையினால் பலர் உயிர் இழந்ததோடு பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தி உள்ளது.

பெய்த பெருமழையால் வீடுகளை இழந்தோர் பல்லாயிரம், ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உடமைகளையும் சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நிர்கதியாய் நிற்கும் காட்சி, நிவாரண முகாம்களில் இருந்து வீடு திரும்பும் போது உண்ண உணவு இன்றி, உடுக்க உடையின்றி, பரிதவிப்பதோடு, அடிப்படை பொருள்கள் அனைத்தையும் புதியதாக பெற்று வாழ்க்கையை தொடங்க வேண்டிய அவலநிலை.

இடைவிடாது பெய்த பெருமழையால், மின் விநியோக கட்டமைப்புக்கான துணை மின் நிலையங்கள், பில்லர் பாக்ஸ், கேபிள்கள், மின்சாரத்தை கொண்டு செல்லும் கம்பிகள், மின்

கம்பிகள் ஆகியவை பழுதுபட்ட காரணத்தினால் மின்சாரம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் மின் வாரிய ஊழியர்களின் தன்னலம் கருதா, இரவு,பகல் பராமல் ஊண் உறக்கமின்றி உயிரையேக் கூட பணயம் வைத்து பணியாற்றி பழுதுகளை சரிசெய்து மின்சாரம் வழங்கிய மின்வாரிய ஊழியர்களின் மதிப்புமிக்க பணியை மின் ஊழியர் மத்திய அமைப்பு மனதார பாராட்டுகிறது.

பெய்த பெருமழை ஓய்ந்த பின்னர் பல்துலக்க பசையின்றி, உண்ண உணவு இன்றி, மழை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் ஏதுமின்றி தத்தளிக்கும் நிலை.

இந்நிலையில் தான் பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுகின்ற சிறு முயற்சியில் மத்திய அமைப்பு ஈடுபட்டுள்ளது. அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்டோர்களுக்கு உடனடி தேவையான பல்துலக்கும் பிரஷ், பற்பசை (டூத் பேஸ்ட்) சோப்பு, உயிர்காக்கும் மருந்துகள், லுங்கி, நைட்டி, நாப்கின், கொசுவத்திசுருள், மெழுகுவத்தி, புடவை ஆகியவைகளை பெற்று பாதிக்கப்பட்டோர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்டோர்கள் பல்லாயிரங்கணக்கானோர்கள் என்பதால் உதவுவதற்கு உச்சவரம்பு ஏதுமின்றி ஒவ்வொரு வட்டங்களிலும், அவரவர்களின் செல்வாக்கிற்கு ஏற்ப மேற்கூறிய பொருள்களாகவோ, அல்லது பணமாகவோ மத்திய அமைப்பின் மாநில மையத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும். இவைகளை பெற்ற பின்னரே அதை பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளித்திட வேண்டியுள்ளது. ஆகையால் இந்த உதவிப்பணி ஆற்றுவதில் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு மத்திய அமைப்பு ஊழியர்களின் முழுசெல்வாக்கையும் பயன்படுத்தி பெற்ற நிவாரணப் பொருள்களை மாநில மையத்திற்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.

நிவாரணப்பொருள்களை மின் ஊழியர்களிடமிருந்து பெற வேண்டுகோள்விடும் டிஜிட்டல் வாசகங்கள், இத்தோடு இணைக்கப்பட்டுள்ளதோடு மத்திய அமைப்பின் வலைத்தளத்திலும் போடப்பட்டுள்ளதை பயன்படுத்திட வேண்டுகிறோம்.

அரசு திரட்டும் வெள்ள நிவாரண நிதிக்கு உதவிடும் வகையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் ஒருநாள் ஊதியத்தை அளித்திடுவது என்று முடிவு செய்து வாரியத்திற்கு இசைவு கடிதமும் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் மத்திய அமைப்பு ஊழியர்கள் ஒருநாள் ஊதியத்தை வெள்ள நிவாரண நிதியாக அளித்திட உள்ளோம்.

தமிழகத்தில் பெய்த பெருமழையால் மின்வாரிய ஊழியர்களும், ஊழியர்களின் வீடுகளும், உடமைகளும் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த பாதிப்புகளை எதிர்கொள்ளும் விதமாக ரூபாய் 20,000/-த்தை வட்டியில்லா முன் பணமாக அளித்து 20 மாதம் தவணைகளில் பிடித்தம் செய்யும் வகையில் வெள்ள நிவாரணம் முன் பணம் கேட்டு கடிதமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இரவு, பகல் பாராமல் ஊண் உறக்கமின்றி நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ள மின்வாரிய ஊழியர்கள் அனைவருக்கும் கடலூர், மின் விநியோக வட்டத்தில் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்ட மின்வாரிய ஊழியர்களுக்கு மும்மடங்கு ஊதியமும், தேநீர், உணவு செலவுக்காக (Packet Expenses) வழங்கிதைப்போல் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கிட வேண்டுமென கடிதமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**டிசம்பர் - 8 அகில இந்திய வேலை நிறுத்தம்- தள்ளிவைப்பு**

2015 - மின்சார சட்டம் திருத்த மசோதாவை கைவிட அரசை நிர்பந்திக்கும் வகையில் டிசம்பர் - 8 மின்சார தொழிலாளர்கள் ஒருநாள் வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விட்டிருந்தோம். அதற்கான பணிகளும் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் நவம்பர் 6-இல் கேரள மாநிலம் கொச்சி மாநகரில் சட்டதிருத்தத்தை கொண்டு வருவதற்கும் அமலாக்குவதற்கும் மாநில மின்துறை அமைச்சர்களை ஒருங்கிணைக்கும் விதமாக மின்துறை அமைச்சர்களின் மாநாடு கொச்சியில் நடைபெற்றது.

மின்துறை அமைச்சர்கள் மாநாடு நடக்கும் அன்றே, அதே கொச்சி மாநகரில் பேரணியையும், கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில் 20,000 மேற்பட்ட நாடுதழுவிய மின்துறை ஊழியர்கள் கலந்து கொள்ளும், பேரணியும், கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. நவம்பர் 6 -இல் மின்துறை ஊழியர்கள் பேரணியும், கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்த உள்ளதை அறிந்து அதன் வேகத்தை குறைக்கும் வகையில் 5.11.2015 அன்று மத்திய தொழிலாளர் இணை ஆணையர் முன்பு மத்திய எரிசக்தி துறை அதிகாரிகள் கலந்து கொண்ட குழு தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியது.

06.11.2015 அன்று நடைபெற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் திரிபுரா மாநில எரிசக்தி துறை அமைச்சர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்ட இயக்கத்திற்கு ஆதரவு நல்கி பேசியது போன்றவைகளுக்கு இடையே கொச்சினுக்கு வருகை தந்திருந்த மத்திய எரிசக்தி துறை அமைச்சர் சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில் மின்சார சட்ட திருத்த சட்டம், நிறைவேற்றுவதன் மூலம் ஊழியர்கள் குறைப்பு இருக்காது. மின் விற்பனையாளர்கள், மின் நுகர்வோர்களை தேர்வு செய்யும் தரத்தில் சில மாற்றங்களை கொண்டு வருவது மின்சார சட்டங்களை பயன்படுத்தி, மின்துறையை மறுசீரமைப்பது சம்மந்தமான காலநிர்ணயிப்பு மாநில அரசுகளின் விருப்பத்திற்கு உட்பட்டது என்பன போன்ற மாற்றங்களை செய்த பின்னர் திருத்த நகல் மசோதாவை வெயிடுகிறோம். அவைகளை பார்த்த பின்னர் மேலும் மாற்றங்கள் தேவையென விரும்பினால் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தலாம், என்று ஆலோசனையை வைத்து பேச்சு வார்த்தையை முடிவுக்கு கொண்டு வந்தார்.

திருத்த மசோதாவில் மாற்றங்களை உருவாக்குவது சம்மந்தமாக அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை பரிசீலித்து வேலை நிறுத்தம் சம்மந்தமாக 1.12.2015 இல் தேசிய மின்சார தொழிலாளர்கள் கூட்டமைப்பின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே திரும்பவும்

பேச்சு வார்த்தைக்காக சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக 4.12.2015 அன்று மத்திய எரிசக்தி துறை அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்த எரிசக்தி துறை அமைச்சகம் ஏற்பாடுகளை செய்தது. இவைகளை கணக்கில் கொண்டு 8.12.2015 இல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தை தள்ளி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்டவாறு 4.12.2015 அன்று மத்திய எரிசக்தி துறை அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. பேச்சு வார்த்தை தொடர்ந்து நடத்திட அகில இந்திய மையம் முயற்சித்துக் கொண்டுள்ளது.

**போனஸ் நன்கொடை வசூல்**

2015 ஆம் ஆண்டு போனஸ் வசூல் நன் கொடை சம்மந்தமாக ஊழியர்களின் விருப்பத்ததை பெற்று மின் வாரியத்திடம் அளித்து மின் வாரியமே வசூல் செய்து தருவதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. ஊழியர்கள் மத்தியில் கையொப்பம் பெற்று தருவது மிகவும் உற்சாகமாக, முனைப்பாக நடைபெற்று வருகிறது. சில திட்டங்களில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட கூடுதலான எண்ணிக்கையில் கையொப்பம் பெற்றுள்ளதாக தகவல் வந்து கொண்டுள்ளது.

ஊழியர்களிடம் கையொப்பம் பெறுகின்ற போதே காலம் மிகவும் குறுகியதாக உள்ளதாலும், தீபாவளி பண்டிகை விடுமுறை குறுக்கிட்டதாலும், சில மாவட்டங்களில் பெய்த அடைமழை போன்றவைகளை காரணம் காட்டி கையொப்பம் பெறுவதற்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் பெற்றுத்தர கோரிக்கை வந்தது. அதன் அடிப்படையில் நாமும் வாரியத்தை அணுகி உள்ளோம். அதாவது டிசம்பர் மாத ஊதியம் 2016 - ஜனவரியில் அளிக்கும் போது நிர்ணயிக்கப்பட்ட போனஸ் நன்கொடையை வசூலித்து தந்திட வேண்டும் என கடிதம் கொடுத்து முயற்சித்து வருகிறோம். இன்னும் சில தினங்களில் அதற்கான ஒப்புதல் கிடைக்க உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வாய்ப்பையும் பயன்படுத்தி போனஸ் நன்கொடைக்காக ஊழியர்களிடம் கையொப்பம் பெறுவதை உச்சகட்ட எண்ணிக்கைக்கு கொண்டு செல்ல வேண்டுகிறோம்.

**2015 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு**

2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை இது வரையில் மாநில மையத்திற்கு 20,000 உறுப்பினர்களுக்கான ஈவுக் தொகையே வந்துள்ளது. இந்த ஆண்டு இலக்கு 31,000 என்பதை நினைவுப்படுத்தி இன்னும் ஒரு மாத சம்பளமே உள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து உறுப்பினர் சேர்ப்பை வேகப்படுத்தி முடித்திட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)
பொதுச் செயலாளர்